1981 மே 8]

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: நாளை தேதியிட்டு ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள வினாக்கள் பட்டியல் வேறொரு நாள் எடுத்துக் கொள்ளப்பெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (9-5-1981)' காலை 9மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

சட்டப் படிக்கான விதிகளும் ஆணைகளும்.

273. வருவாய்த் துறையில் 7-9-1971-ஆம் தேதியன்று வெளியாகி, 8-9-1971ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்—பாகம்—2, பிரிவு—1, பக்கம் 2ல் வெளியான II-1, 3987 (ஆ)/1971-ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 20-8-1980-ஆம் தேதியிடப்பெற்ற 1945-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1969—ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

274. சென்னை மாநகர், ஜீவா நகரத்திற்கான விரிவான மேம்பாட்டுத் திட்டத்தை வெளியிடுவது குறித்து, வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27.9.1981—ஆம் தேதியிடப் பெற்ற 1264—ஆம் எண் அரசாணயில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971—ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புறத் திட்ட அமைப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரரவைமுன் வைக்கப் பெற்றது].

275. சென்னை மாநகர், திட்ட அமைப்புப் பகுதி 11.1 கிருஷ்ணாம் பேட்டைப் பகுதிக்கு விரிவான வளர்ச்சித் திட்டத்தை வெளியிடுவது குறித்து, வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1-10-1980-ஆம் தேதியிடப்பெற்ற 1286 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971—ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புறத்திட்ட அமைப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

276. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1979-80ஆம் ஆண்டிற்கான 6—வது ஆண்டு அறிக்கை (தமிழ், ஆங்கிலம்). 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—அ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

ஆ. அறிக்கைகள் அறிவுப்புகள் ஏனைய தாள்கள்.

197. கோரிக்கை எண். 11— மாவட்ட நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு 1981-82 (தமிழ், ஆங்கிலம்)

இணைப்பு.

[..23..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 956க்கான விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாட்டில் ஆறுகள் மற்றும் ஓடைகளில் ஓடும் தண்ணீரில் (மழைத் தண்ணீரையும் சேர்த்து) 95 சதவீதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மழைக்கால வெள்ளம் கடலில் கலப்பதைத் தடுத்து, அதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தோடுதான் நடுத்தரப்பாசனத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சில காலங்களில் மட்டுமே, எதிர்பாராத அளவிற்கு மழை பெய்யக்கூடும். அவ்விதம் கிடைக்கும் மழை நீரை, எல்லா ஆறுகளிலும் அணைகளைக் கட்டி, தேக்கி வைப்பது என்பது சாத்தியமானதல்ல. பொருளாதார ரீதியிலும் சாத்தியமல்ல. ஆகவே, அந்தக் குறிப்பிட்ட காலத்தில் மிகுதியான மழை நீர் கடலில் சென்று கலப்பதைத் தவிர்க்க முடியாது.

(ஆ) & (இ): பொது பணித்துறையில் நீர்பாசன திட்ட ஆய்விற்காக ஒரு தனித் தலைமைப் பொறியாளர் இருக்கிறார். மேலும், இருக்கின்ற நீர்வளங்களை பாசனம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்கு பயன்படுத்துவது குறித்து பரிசீலனை செய்து அரசுக்கு பரிந்துரை செய்வதற்காக ''நீர் உபயோகத் திறன் குழு'' (Water Utilisation Committee) ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது.